# திருக்குறளில் பெண்மையின் சிறப்பியல்புகள்

19

**ஜெ.இந்துமதி & முனைவர். செ.சுப்புலட்சுமி**
**வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை**
**bkmandhir@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும் போதே உலகமும் உடன் தோன்றுகிறது, உலக வாழ்க்கைக்கு தேவையான கருத்துக்களை குறளாக எழுதியுள்ளார் திருவள்ளுவர். இந்தக் கட்டுரையில் பெண்மையின் சிறப்புகள், உலக வாழ்வில் பெண்மையின் முக்கியத்துவம், பங்களிப்பு, மேன்மை, காதல், விருந்தோம்பல், மக்கள் பேறு என பல்நோக்கில் பெண்மையின் மகத்துவத்தை பற்றி திருவள்ளுவர் கூறியுள்ளதை காண்போம்.

**ஆய்வு நோக்கம்**

இனிய செந்தமிழில் எத்தனையோ இலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் தமிழரின் வாழ்வியலை பற்றி எடுத்துரைக்கும் மிக அரிய இலக்கிய நூல் திருக்குறள். திருக்குறளில் பெண்மையின் சிறப்புகள் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பது பற்றி எடுத்துரைப்பதே இந்த ஆய்வின் நோக்கம்

**முன்னுரை**

மக்கள் வாழ்விற்கு அடிப்படையான அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளில் மானுடம், குடும்பம், அறம், நீதி, நம்பிக்கை, அரசியல், காதல் முதலிய இலக்கிய உத்தியுடன் மக்கள் எளிமையாக புரிந்து கொள்ள படைக்கப்பட்ட பேரிலக்கியம் திருவள்ளுவர் தந்த திருக்குறள். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு எனக் கூறி முதலில் குடும்பத்தில் தனது கருத்துக்களை முன்வைக்கிறார். நல்ல சமூகத்தை உருவாக்க அறவழியில் நிற்கும் குடும்பமே முக்கியம் அதனால்தான் நாடும் சீராகும் என்கிறார் திருவள்ளுவர். மேலும் பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளை கடிந்தும், மனமாசு அகற்றலே துறவு என்றும், இயற்கை நுட்பத்தை விளக்கியும், இயற்கை பொது நெறியை அறிவுறுத்தியும், அவர் கூறியுள்ள கருத்துகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்களுக்கு மேலும் ஒரு மணி மகுடமாகும்.

**வாழ்க்கைத் துணை என்பது பெண்ணிற்கும் பெருமை**

வாழ்க்கைத் துணை என்பது பெண்ணுக்கும் ஆணுக்கும் பெருமைக்குரிய விசயம். இதில் சிறுமை என்பது கடுகளவும் கிடையாது.

இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் முதல் இரண்டு குரல்களிலும் கணவனே இல்வாழ்க்கைக்குத் துணை என்பதை "இல்வாழ்வான் என்பான் துணை" என்கிறார். ஆனால் இன்பத்துப்பாலில் தலைவியின் அன்பையும் கணவன் மனைவியின் உறவையும் சிறப்பாக கூறியுள்ளார். ஒருவருக்கு ஒருவர் துணை என்பதே ஆக்கபூர்வமான இல்லறம் என்கிறார்.

**பெண்ணே பெருந்தக்கது**

திருவள்ளுவர் பெண்ணே பெருந்தக்கது என்பதை முப்பாலிலும் கூறியுள்ளார். பெருந்தக்கது

என்றால் பெருமைக்குரிய தகுதியுடையது என்று பொருள்.

பெண்ணில் பெருந்தக்கது யாது என்று அறத்துப்பாலில் வினா எழுப்பி, "பெண்ணில் பெருந்தக்கது இல்" என்று பொருட் பாலில் உறுதி செய்து, "பெண்ணே பெருமை உடைத்து" என்று காமத்துப்பாலில் உறுதிபட கூறுகிறார்.

**பெண்ணே கற்பகம்**

" இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"(53)

கற்பகம் விருட்சம் போல் வீடு தோறும் பெண்கள் திகழ்கின்றனர். கற்பை தன்னகத்தே கொண்ட மகளிரை கற்பகம் என்கிறார். அக்கற்பகம் குடும்பத்தின் தேவை, விருப்பு, வேண்டுதல் என்பவை அனைத்தையும் உணர்ந்து, எதிலும் குறை இல்லாமல் செய்து குடிநலம் காப்பாள். கற்பகம் குடும்பத்திற்கு வாய்ப்பது அரிது, அப்படி வாய்த்து விட்டால் அக்குடும்பத்திற்கு எல்லா நலன்களும் உண்டு. அப்படி இல்லாவிட்டால் குடும்பத்திற்கு என்ன வளம் வாய்த்திருந்தாலும் அவை வாய்த்ததாகாது என்பதை இக்குறள் விளக்குகிறது.

**பெண்கள் போற்றும் அறம்**

" பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் " (54)

ஒருவன் அடைய வேண்டிய செல்வங்களுள் மனைவியை விட மேன்மையான செல்வம் எது உள்ளது. அவனிடத்துக் கற்புடைய மனைவியைத் தவிர வேறு எந்த செல்வமும் இதற்கு இணையாகாது. கற்புடைய மனைவியைத் தவிர அடையக்கூடிய மேன்மையானது உலகில் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (45)

மேற்காணும் குறளில் பெண்களைப் போற்றும் அறத்தினை விளக்குகிறார். இல்வாழ்க்கைப் பண்பு, அன்பு செலுத்துவதும், அறம் செய்வதும் என்று கூறுகிறார், அன்பும், அறிவும், ஆற்றலும் கொண்ட மனைவியே இல்லறத்திற்கு இன்றியமையாதவள் என்கிறார் திருவள்ளுவர்.

**கணவன் மனைவி உறவில் பெண்ணின் சிறப்பு**

"தெய்வம் தொழாஅள் தொழுந**ன்** தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (55)

பண்டைக் காலத்தில் ஆண்கள் மிகுதியாக உழைப்பில் பங்கெடுத்தார்கள். அதேபோல் பெண்களும் ஆண்களை சார்ந்து வாழ்ந்தனர். இதை பதி பக்தி எனப் போற்றினர் நம் முன்னோர். கடவுளை வழிபடாது கணவனை வழிபடும் பெண்கள் பெய் என கூறினால் மழை பெய்யும் என்ற கருத்தை கூறி கணவன் மனைவி **உறவில் உறவையும், பெண்ணை**யும் சிறப்பிக்கிறார் திருவள்ளுவர்.

" பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு" (58)

கணவனைப் பேணும் மகளிர், மேல் உலகில் பெரும் சிறப்பை பெறுவார்கள் என்று பெண்ணின் சிறப்பை மேலும் இந்த குறள் மூலம் மேன்மைப்படுத்துகிறார் திருவள்ளுவர்.

**தாய்மை**

" மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்

நன்கலம் நன்மக்கட் பேறு" (60)

கற்றுணர்ந்த அறிஞர்கள் கூறுவது ஒருவருக்கு அவரது மனைவியின் நற்குணங்கள் நற்செய்கைகள் நன்மை தரக்கூடியவை என்பதாகும். அந்த நற்குணங்களுக்கு நற்செயலுக்கும் அணிகலன் போல திகழ்வது நல்ல புதல்வரை பெறுதலாகும் என்கிறார் திருவள்ளுவர்.

" ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்" (69)

எல்லா பேறுகளிலும் மிக உன்னதமாக பெறும் பேறு மக்கட் பேறுதான். அதன் சிறப்பினை திருக்குறள் வலியுறுத்துகின்றது. மக்கட் செல்வம் இல்லையெனில் வாழ்வதே பயனற்றது. அப்படிப்பட்ட மக்கள் செல்வத்தை பெற்ற பொழுது பெற்ற மகிழ்ச்சியை விட மகனை கல்வி கேள்விகளில் நிறைந்தவன் என்று அறிவுடையோர் அவனை கூறும்பொழுது, பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட மிகவும் அதிகமான மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**பெண்ணின் மென்மை**

" அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு

நல்ல படாஅ பறை" (1115)

பெண்களை மென்மையானவர்கள் எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். எவ்வளவு மென்மையானவள் என்றால் இவள் தனது மென்மையான தன்மையை மனதில் கொள்ளாமல் அனிச்ச பூவை காம்பின் அடிப்பகுதியை நீக்காமல் சூடிக் கொண்டால் இனி இவளது இடைக்கு நல்ல பறைகள் ஒலிக்கா, என பெண்ணை அனிச்சமலருக்கு ஒப்பான மென்மையானவள் என கூறுகிறார்.

**பெண்ணே அமிழ்து**

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்,

தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று" (11)

திருவள்ளுவர் உண்ணும் உணவாகவும், பயிருக்கு நீராகவும், உயிரையும் பயிரையும், வளர்க்கும் வான்மழை அமிழ்து என எண்ணினார்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு

வீழ்வார் அளிக்கும் அளி"(1192)

அவ்வான் மழைக்கு ஒப்பாக, குடும்பத்தில் தேன் மழையாய் திகழும் மகளிர் அமிழ்து என்கிறார்.

"உறுதோ உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு

அமிழ்தின் இயன்றன தோள்" (1106)

வாடி இருக்கும் உயிர் மீண்டும் தளிர்ப்பதற்குக் காரணமாக இருப்பது தலைவியின் தோள்கள் என்கிறார். வாடி வதங்கும் தலைவனுக்கு ஆறுதல் தலைவியின் தோள்கள் என்று கூறி கணவன் மனைவி உறவை

உன்னதமாக்குகிறார். தாய் அமிழ்து, அவள் பேணுதல் அமிழ்து அவள் கொடுப்பது அமிழ்து, அவள் ஊட்டுவது அமிழ்து, குடும்பத்தை இன்பமாக வைத்த பெண்மையே பேரமிழ்து என்கிறார் திருவள்ளுவர்.

**பெண்ணே விருந்து**

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயிறு ஊறிய நீர்" (1121)

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல விருந்து ஒருங்கே தருபவள் பெண்ணே. அன்பால் கூடி மகர்பேற்றை தந்து உற்றார், உறவு, சுற்றம், சூழல், உலகு என விரிய வைக்கும் பண்பாட்டு விருந்துக்கு மூலமானாவாள் பெண் என்கிறார் திருவள்ளுவர். ஒரு நேரத்தில் ஓர் இடத்தில் ஐம்புலன்களுக்கும் இன்பம் ஒன்றாய் தரும் இயல்பை இயற்கையாகவே தன்னகத்து கொண்டிருக்கிறாள் பெண் என்பது அவளின் பெரும் சிறப்பாகும். இதனை திருவள்ளுவர் வியந்து போற்றுகிறார்.

**பெண்ணே உயிரும் நட்பும்**

" உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு" (1122)

உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள நட்பு, கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள நட்பாகும். ஒருவர் இல்லாமல் மற்றொருவர் வாழ இயலாது என்பதை உணர்த்துகிறது இந்தக் குறள். மேலும் அவனுக்கு அவளே உயிராகவும், அவளுக்கு அவனே உயிராகவும், உயிரோடு இணைந்த தன்மையினால் உயிரைத் துறக்கவும் முடிவெடுக்க வல்ல துணிவு கொண்டவள் பெண் என்கிறார் திருவள்ளுவர்.

**பெண்ணே மருந்து**

" இருநோக்கு இவ**ளு**ண்கண் உள்ளது ஒருநோக்கு

நோய்நோக்**கொ**ன் றந்நோய் மருந்து" (1091)

பல்வேறு நோய்களுக்கு பல்வேறு மருந்துகள். ஆனால் பெண்ணால் உண்டாகும் நோய்க்கு மருந்து அவளே மருந்து என்கிறார். “நோயைத் தந்ததுவே நோயை தீர்க்கும் மருந்தாகும்” என்பது விந்தையில் விந்தை. உயிர்த்தளிக்க வைக்கும் அமிழ்தாக **பெண்** இருக்கிறாள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**விருந்தோம்பல்**

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து

நல்விருந்து ஓம்புவான் இல்" (84)

இல்லம் ஆளுபவள் இல்லாள், அந்த இல்லாள் முகமலர்ச்சியோடு விருந்தினரை உபசரித்து போற்றும் வீட்டில் திருமகள் குடிஇருக்கின்றாள் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

**முடிவுரை**

திருக்குறள் அறநெறி கருத்துக்களை பற்றி கூறினாலும் வள்ளுவர் அக்காலத்திலேயே குடும்பம் சமூகம் அடிப்படையில் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆற்றக்கூடிய கடமைகளை இல்லறவியலிலும், இன்பத்துப்பாலிலும் மிகுதியாக கூறியுள்ளார். வாழ்க்கைதுணை, நலம், மக்கட் பேரு, இல்வாழ்க்கை, விருந்தோம்பல் ஆகிய அதிகாரங்களில் குடும்பப் பெண்கள் வகிக்கும் சமூக முதன்மையை கூறுகிறார். பெண்

நற்பண்புகள் நிறைந்தவள், தன்னையும் கணவனையும் குடும்பத்தையும் பேணுபவள். மன உறுதி தளராமல் வாழ்பவள், நன்மக்களை பெற்று வளர்க்கும் பொறுப்புடையவள், அன்பானவள், என பல கடமைகளை கொண்டவளாக வள்ளுவர் கூறி சிறப்பிக்கிறார்

**திறவுச் சொல்**

1. **பெண்மை**
2. **மேன்மை**
3. **அதிகாரம்**
4. **மகளிர்**
5. **மாண்பு**
6. **விருந்தோம்பல்**
7. **பெருந்தக்கது**
8. **கற்பகம்**
9. **அறம்**
10. **அமிழ்து**

**துணை நூற் பட்டியல்**

திருக்குறள் களஞ்சியம், முது முனைவர் ரா. இளங்குமரனார்

திருக்குறள் வாழ்வியல், உரை மதுரை இளங்குமரனார்

பாமரருக்கும் பரிமேலழகர், சின்னச்சாமி ராஜேந்திரன்

திருக்குறள், அ.ஆறுமுகம்.

திருக்குறள் மூலமும் உரையும், திரு.மு.வரதராசனார்

திருக்குறள் உரை, பரிமேலழகர்

திருக்குறள் புதிய உரை, சுஜாதா.

வள்ளுவர் காட்டும் குடும்பம், ரா. இளங்குமரனார்